முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>அசல் வழக்கு எண்.68/2025</u>**

தளவாய்சாமி மற்றும் இருவர் ... வாதிகள்

–எதிர்–

வட்டாட்சியர்,
திருநெல்வேலி தாலுகா மற்றும் ஒருவர் ... பிரதிவாதிகள்

**<u>நீதிமன்ற முத்திரைக் கட்டணத்திற்கான பரிகாரம் / சொத்தின் விபரம்</u>**

| சட்டப்பிரிவும் மற்றும் உட்பிரிவும் | வழக்கின் தன்மை | சொத்தின் வருடாந்திர தீர்வை அல்லது குத்தகை | பிராது பரிகாரத்தின் மதிப்பு அல்லது சொத்தின் சந்தை மதிப்பு | நீதிமன்ற முத்திரை கட்டண மதிப்பு |
|---|---|---|---|---|
| 25(d) | விளம்புகை பரிகாரம் | --- | ரூ. 5,000/- | ரூ.150/- |
| 27(c) | செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் | --- | ரூ.1000/- | ரூ.30/- |
| | | | | ரூ.180/- |

// உத்தரவுப்படி //

தலைமை எழுத்தர்

**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 25 ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.68/2025**

CNR No. TNTL06-000678-2025

1) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தாலுகா, கங்கைகொண்டான், அணைத்தலையூர், முப்புடாதி அம்மன் கோவில் தெரு, கதவு எண் 23 இல் வசித்து வரும் இசக்கி அவர்கள் குமாரர் தளவாய்சாமி, வயது 60, இந்து, வெளிநாட்டு வேலை

2) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தாலுகா, கங்கைகொண்டான், அணைத்தலையூர், கீழத்தெரு, கதவு எண் 50/5 இல் வசித்து வரும் மணி அவர்கள் மனைவி பாப்பா, வயது 64, இந்து, கூலிவேலை

3) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தாலுகா, கங்கைகொண்டான், அணைத்தலையூர், அம்மன் கோவில் தெரு, கதவு எண் 6/63 இல் வசித்து வரும் வடிவேலு அவர்கள் மனைவி பேச்சியம்மாள், வயது 53, இந்து, கூலிவேலை ... வாதிகள்

–எதிர்–

1) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகரம், சுவாமி நெல்லையப்பர் சாலையில் அலுவலகம் கொண்டிருக்கும் வட்டாட்சியர், திருநெல்வேலி தாலுகா.

2) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகரம், கொக்கிரகுளத்தில் அலுவலகம் கொண்டிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி. ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, இறந்து போன இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவருக்கு வாதிகள் தான் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை

பரிகாரம் கோரியும் மற்றும் வாதிகள் தான் சட்டப்படியான வாரிசுகள் எனக் குறிப்பிட்டு 2ம் பிரதிவாதி வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டுமென செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்த நாள் | – | 09.12.2024, 20.02.2025 |
| வழக்குமூலம் | – | 07.11.1989, 30.01.2024, 15.04.2024 ஆகியதேதிகளில் அணைத்தலையூர் கிராமத்தில் வைத்து உற்பத்தி. |
| பிராது மதிப்பு | – | "அ" பரிகாரத்திற்கு ரூ.5,000/-<br>"ஆ" பரிகாரத்திற்கு ரூ.1,000/- |

தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கட்டணச் சட்டம் பிரிவு 25(d)ன் படி ரூ.150/-ம், தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கட்டணச் சட்டம் பிரிவு 27(c)ன் படி ரூ.30/-ம், மொத்தம் ரூ.180/- செலுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு 21.02.2025ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.06.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.குலசேகரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.R சங்கர் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு உட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்பாணை**

1. இவ்வழக்கானது பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

2. கடந்த 07.11.1989 ம் தேதியில் இறந்து போன இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவருக்கு வாதிகள் தான் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை செய்யப்படுகிறது.

3. வாதிகள் கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி செய்யப்படுகிறது.

4. வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு அவரவர் செலவு தொகையை அவர்வர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். செலவு தொகை இல்லை.

**<u>செலவு விவரப் பட்டியல்</u>**

(இரு தரப்பிலும் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 25 நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.07.06 13:08:30 +0530

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

அ.வ.எண்.68/2025

தீர்ப்பாணை

25.06.2026